*ஜூன் 7, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தாய், பாபா உங்கள் ஒவ்வொருவரையும் சுய-தரிசன சக்கரத்துடன் பார்த்தார். நீங்கள் அனைவரும் சுய-தரிசன சக்கரத்தை சுழற்றுபவர்கள், ஆனால் சில குழந்தைகளின் சுய-தரிசன சக்கரங்கள் தன்னிச்சையாக சுற்றுகின்றன, மற்றவர்கள் அவர்களின் சக்கரங்களை சுற்ற வேண்டியதாக இருந்தன. சில குழந்தைகள் சரியான வழியில் சுற்றுவதற்கு பதிலாக தவறான திசையில் சுற்றுகின்றனர். அவர்கள் சுய-தரிசன சக்கரத்தை சுழற்றுவதற்கு பதிலாக அவர்கள் மற்றவர்கள் பார்க்கும் சக்கரத்தை சுழற்றுகின்றார்கள். அதன் பின்னர் அவர்கள் "ஏன்?", "என்ன?" போன்ற கேள்விகளினால் வலையை உருவாக்குகின்றார்கள். அவர்கள் தாங்களாகவே ஒரு வலையை பின்னி அதன் பிறகு அந்த வலையில் தாங்களாகவே அதில் சிக்கிக்கொள்கிறார்கள்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் ஒரு முழு ஞானம் நிறைந்த மாஸ்டர் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்கின்றேன். நான் தொடர்ந்து சுய-தரிசன சக்கரத்தை சுலபமாக சுற்றுவேன். நான் மற்றவர்களை பார்க்கும் வலையிலிருந்தும், மேலும், "ஏன்?" மற்றும் "என்ன", போன்ற கேள்விகளை எழுப்புவதிலிருந்தும் முற்றிலுமாக விடுபடுவேன். என்னுடைய விழிப்புணர்வில் கால சக்கரத்தில் என்னுடைய முழு பயணத்தையும் வைத்திருக்கும்போது, நான் ஜிவன்முக்தி அடைந்து பாபா உங்களுடன் முழு உலகத்தையும் சுற்றுப்பயணம் செய்ய முடிகின்றது. மேலும் என்னுடைய சேவை முழு உலகத்திற்கும் பயனளிக்கின்றது.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் கொடுத்துள்ள நித்திய வாய்ப்பானது நீங்கள் அனைவரும் தொடர்ந்தும் தந்தையின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க முடியும் என்பதாகும். எனினும், கர்ம தத்துவத்தின் தனிச்சையான சுழற்சி படி, தொடர்ந்தும் தந்தையின் ஸ்ரீமத்தை பின்பற்றுபவர்களால் மட்டுமே சிம்மாசனத்தில் வீற்றிருக்க முடியும்.

இனிமையான பாபா, நான் என்னுடைய மனோபாவத்தை மாற்றிகொள்வதன் மூலம் என்னை விட்டு என்னுடைய ஆணவம் நீங்கிவிட்டது. நான் உங்களை மட்டுமே பார்க்கும் மற்றும் உங்களுடைய ஸ்ரீமத்தை மட்டுமே பின்பற்றும் ஒரு மனோபாவத்தை உருவாக்கி கொள்வேன். இனிமையான பாபா, எனக்கு வேண்டியது உங்களுடைய இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது மட்டுமே ஆகும்.

இதற்காக, நான் என்னுடைய எண்ணங்கள், சொற்கள் மற்றும் நடவடிக்கைகளில் உங்களை பின்பற்றும் மனோபாவத்தை உருவாக்கி கொள்வது அவசியமாகும்.

### திருஷ்டி அல்லது தூய பார்வை

பாபா ஆத்மாவிற்கு: ஒவ்வொரு குழந்தையும் அழகாக அலங்கரிக்கப்பட்ட பாதுகாப்பு குடையின் கீழ் அமர்நதிருக்கிறார்கள். சேவையில் பொறுப்பு கிரீடம் அணிந்து கொண்டு உலக நன்மைக்காக சேவையாற்றும் குழந்தைகள் மட்டுமே இந்த பாதுகாப்பு குடையின் கீழ் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் மிகவும் அழகாக ஒரு இரட்டை கிரீடம் அணிவிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒன்று, முழுமையான தூய்மையை குறிக்கும் ஒளி கிரீடம் ஆகும். மற்றொன்று சேவையை குறிக்கும் கிரீடம் ஆகும்.

இன்று நான் என்னுடைய திருஷ்டியில் என்னுடைய தலை மீது இருக்கும் அந்த அழகாக அலங்கரிக்கப்பட்ட பாதுகாப்பு குடையை வைத்திருப்பேன். இதை தொடர்ந்தும் நான் என்னுடைய திருஷ்டியில் வைத்திருப்பதனால், என்னுடைய தூய்மை மற்றும் சேவையின் மூலம் உலகத்திற்கு நன்மை கொண்டுவரும் இரட்டை பொறுப்புகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று புரிந்து கொள்கின்றேன். நான் இரட்டை கிரிடம் அணிந்து  பாதுகாப்பு குடையின் கீழ் அமர்ந்திருப்பதை பார்க்கின்றேன்.

### ஓர் அலையை உருவாக்குதல்

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*